LIBRARY
EASTERN UNIVERSITY, SRI LANKA.
14 MAR 2017

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட முதலாம் அரையாண்டிற்கான பொதுக்கலைமாணித் தேர்வு 2014/2015

## கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள் (Basic Concepts of Education)

## ED - 1112 (02 மணித்தியாலங்கள்)

பகுதி I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களுக்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி I

1. அ. "கல்வி தொடர்பான வரைவிலக்கணங்கள் சமூகத்திற்கு சமூகம் மாறுபடும் தன்மை உடையதாகக் காணப்படுகின்றன" இம் மாறுபாட்டிற்கான காரணங்களில் மேலைத்தேச, கீழைத்தேச வரைவிலக்கணங்கள் பெறும் முக்கியத்துவத்தினை ஆதாரம் காட்டி விளக்குக?

(10 புள்ளிகள்)

ஆ. "இருபத்தோராம் நூற்றாண்டிற்குப் பொருத்ததமான முறைசார் (Formal Education) கல்விச் செயன்முறைகளுக்கு, இன்றைய முறையில் கல்விச் செயன்முறைகள் (Informal Education) ஊக்கமளிப்பதாகக் காணப்படும்போதுதான் விளைதிறன் மிக்க புதிய கல்விப்பாதையை உருவாக்க முடியும்" இக்கூற்றினை விமர்சன ரீதியாக் ஆராய்க?

(10 புள்ளிகள்)

2. அ. "ஓர் உயர் தொழிலாளன் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் உயர்வகைத் திறன்களாகக் காணப்பட வேண்டும்" என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் ஆசிரியர் தொழில் ஓர் உயர்வகைத் தொழில் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் ஐந்தினை தொகுத்து விளக்குக?

(10 புள்ளிகள்)

ஆ. "கற்பிப்போனின் நடத்தை, அறிவு மட்டம் என்பவற்றினைக்கொண்டே கற்பிக்கப்படும் மாணவர்களின் நடத்தை, அறிவு மட்டம் தீர்மானிக்கப்படுகின்றன" இன்றைய நிலைப்பாட்டில் ஆசிரியர்கள் தமது வகிபங்கினை உயர்நிலையில் வலுப்படுத்துகின்றனரா என்பதனை அனுபவ ரீதியாக தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

3. பின்வருவம் ஐந்து விடயங்கள் தொடர்பான விளக்கத்தினை குறிப்பாக விளக்குக.

அ. "பாடசாலை ஒழுங்கமைப்பு"

ஆ. "மகாத்மா காந்தியின்" கல்வி தொடர்பான முக்கிய கருத்துக்கள்.

இ. "இலங்கை அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தமும் கல்வியும்"

ஈ. புரோபலின் **"குழந்தைப் பூங்கா"**

உ. **"தொலைக்கல்வி"** (Distance Education) பெறும் முக்கியத்துவம்.

(5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. இயற்கைவாதியான ரூசோவின் கலைத்திட்டத்தின் பிரதான அம்சங்களை வகைப்படுத்தி, ஒவ்வொரு நிலையிலும் அவர் இயற்கையான செயற்பாடுகளுக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தினையும் பரிசீலனை செய்க?

(15 புள்ளிகள்)

ஆ. **"இலட்சிய வாத ஆசிரியர் ஒருவர் மாணவனின் உள்ளார்ந்த இலக்கினைக் கண்டறிந்து அதற்கேற்ப கல்வி புகட்ட வேண்டும்"** கல்வியில் இலட்சியவாதம் பெறும் முக்கியத்துவம் ஐந்தினை இன்றைய பாடசாலை நிலைமைகளோடு தொடர்புபடுத்தி விளக்குக?

(15 புள்ளிகள்)

5. அ. **"அனுபவத்தில் பெறப்படாத அறிவு ஏட்டுச் சுரக்காய் போலத் தென்படும்"** ஜோன் டியூவி இன் (John Dewey) கல்விச் சிந்தனைகளில் ஒன்றான இக் கூற்று பெறும் முக்கியத்துவத்தினை பயன்பாட்டுவாத கல்விக் கொள்கைகளோடு தொடர்புபடுத்தி ஆராய்க?

(15 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் இன்றைய அரசாங்கம் மாணவர்களின் தொழிற் தேவையைக் கருத்திற்கொண்டு உருவாக்கிய தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் அனுபவக்கல்வி முறையின் வினைத்திறன் செயற்பாடுகள் தொடர்பாக பரிசீலனை செய்க?

(15 புள்ளிகள்)

6. அ. பன்முகப்படுத்தலின் பின்னர் கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களில் மாகாணக்கல்வி முறையின் தற்போதய கட்டமைப்பு தொடர்பாகவும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்குக?

(15 புள்ளிகள்)

ஆ. பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கங்கள் சரியான விதத்தில் அடையப்படுகின்றனவா என்பதனை இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை மையமாகக்கொண்டு முக்கிய ஐந்து விடயங்களை மையமாகக்கொண்டு ஆராய்க?

(15 புள்ளிகள்)